39

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

Scan QR Code

ISSN 2792-1026

ஐந்தாவது அகவையை நோக்கிய பயணத்தில் துணிந்தெழு சஞ்சிகை...

+94757000791 magazine.skytamilnews.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் | இதழ் - 39 | 25 மே 2025

Thuninthelu Magazine

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்

Sky Tamil Media Network (Pvt) Ltd



## ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் புதிய முயற்சி



## பொலன்னறுவை மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் "பிம்புரத்தேவ குளம்"




## செயற்கை நுண்ணறிவு AI பற்றிய புதிய தொகுப்பு



## கத்தாரில் தமிழ் பாடத்தில் நூற்றுக்கு நூறு பெற்ற மாணவிகளுக்கு குவியும் பாராட்டுக்கள்



## மனக்கணிதத்தில் பல சாதனைகளை நிலைநாட்டிய எம்.ஆர்.எம். நிஸ்பஹான் அவர்களுடனான நேர்காணல்

sky தமிழ்
Media Network

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
**Sky Tamil Media Network (Pvt) Ltd**
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙට්
**REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA**



**ஜே.எம்.பாஸித்**
ஸ்தாபக பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை



பொது முகாமையாளர்
ஹுபைப் முஸம்மில்



பிரதி முகாமையாளர்
அஸ்ரி இப்னு அமீர்



பிரதம ஆசிரியர்
எம்.எஸ்.எம்.ஸாகிர்

## ஆலோசகர்கள் :

புரவலர் ஹாசிம் உமர்
தெ. செந்தில்வேலவர் – பிரதம ஆசிரியர் தினகரன்
கலாபூஷணம் நூருல் அமீன் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) – கத்தார்
மொஹமட் சாலிஹீன் – சிரேஸ்ட வானிலை அதிகாரி
றியாத் ஏ மஜீத் – சிரேஸ்ட ஊடகவியலாளர்

# துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

**பிரதி முகாமையாளர்:**
அஸ்ரி இப்னு அமீர் – துணிந்தெழு சஞ்சிகை

**உதவி முகாமையாளர்:**
ஹப்ஸா பஹுமீர் – துணிந்தெழு சஞ்சிகை
சி. கற்பஹாசினி – துணிந்தெழு சஞ்சிகை

**நிர்வாக குழு:**
ஜபீர் எம் மஹ்ரூப் – பிரதி முகாமையாளர், ஸ்கை தமிழ்
ஆஷிகா பர்சான் – பிரதி முகாமையாளர், ஸ்கை லங்கா

**பிரதம ஆசிரியர்:**
எம்.எஸ்.எம்.ஸாகிர்

**இணையாசிரியர்கள்:**
குலசிங்கம் கிலசன் – கல்முனை
முனீரா வாஹித் – பதுளை
மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி

**ஆசிரியர் குழு :**
ஜவ்சன் அஹமட் – மருதமுனை
எம்.பஹ்த் ஜுனைட் – காத்தான்குடி
நிஹாசா நிசார் – கத்தார்
கமறுன் நிஸாம் (ஷாமென்) – கண்டி
ஏ.எம். கஸ்பியா வீவி – கல்முனை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
நிஹானா இஷாக் – கம்பளை
மொஹமட் நிப்ராஸ் – வாழைச்சேனை

**வடிவமைப்பாளர்கள்:**
ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் – அம்பாறை
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

**இணையத்தளம் மற்றும் சமூக வலைதளம் பொறுப்பாளர்:**

அஸ்ரி இப்னு அமீர் – அட்டாளைச்சேனை
எம்.பஹ்த் ஜுனைட் – காத்தான்குடி
நிஹாசா நிசார் – கத்தார்
ஜவ்சன் அஹமட் – மருதமுனை
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

+97431060249 | 0757000791 skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com

**ஆசிரியரின் கருத்து......**

# ஆட்கொல்லி விபத்துக்களுக்கு முடிவில்லையா?

கடந்த ஐந்து மாதங்களில் நாட்டில் 895 வாகன விபத்துக்கள் இடம் பெற்று, 957 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடத்தை விட இந்த ஆண்டில் விபத்துக்கள் அதிகரித்துள்ளதனை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் மே பன்னிரண்டாம் திகதி வரை 852 விபத்துக்கள் ஏற்பட்டு 891 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதே நேரம் 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 12ஆம் தேதி வரை 895 விபத்துக்கள் இடம் பெற்று அதன் மூலம் 951 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என பொலிஸ் தலைமையக அறிக்கை இதனைத் தெரிவிக்கின்றது.

விபத்துக்கள் நாட்டில் நாளாந்த நிகழ்வாக மாறியுள்ளது. கரடியல்லையில் இடம்பெற்ற விபத்தில் 22 பேர் அநியாயமாக உயிரிழந்தனர்.

இந்த கரடியல்ல விபத்தை அடுத்து நாட்டில் மீண்டும் விபத்துக்களைத் தடுப்பதன் அவசியம் பற்றி பேசத் தொடங்கியுள்ளனர். வாகன விபத்துக்கள் பற்றி அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். யுத்த காலத்தில் மக்கள் வெளியே சென்றால் வீட்டுக்கு திரும்பி வராத போன்றதொரு நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. வாகன விபத்துகளில் எந்த நேரத்தில் எங்கு எதிர்கொள்வார்கள் என்பது பற்றி தெரியாமல் இருக்கின்றது.

பெரும் அச்சத்தை மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்துகின்றது. இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

தூர பஸ் சேவைகளுக்கு இரண்டு சாரதிகளை சேவையில் அமர்த்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு இருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. இதுபோன்று பல புதிய விடயங்களை அமல்படுத்தி, வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். கடுமையான சட்டங்கள் அதே போன்று தொடர்ச்சியான அறிவுறுத்தல்கள் தேவை. வாகன சாரதிகள் தொடர்பான பயிற்சிகள் வழங்குவது அவசியம். இலங்கை போக்குவரத்து சபை மாத்திரமல்ல, தனியார் போக்குவரத்து நிறுவனங்களும் இது குறித்து கூடுதலான அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

விபத்தைத் தடுக்கும் முகமாக வேகக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு நெறிமுறைகள் நாட்டில் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை யார் மீறினாலும் அது தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகிறது.

ஆனாலும், வேகக் கட்டுப்பாட்டை பின்பற்றாமல் மது அருந்தியோ, தூக்கத்திலோ வாகனங்களைச் செலுத்துதல், கைப்பேசியில் பேசிக்கொண்டு வாகனங்களை செலுத்துதல் ஏனைய வாகனங்களோடு போட்டி போட்டுக்கொண்டு தமது வாகனத்தில் பயணிக்கும் பயணிகளை கணக்கில் எடுக்காமல் ஓட்டப்பந்தயக்காரர்கள் போல் சாரதிகள் வாகனத்தைச் செலுத்துவதும் பெரும்பாலான விபத்துகளுக்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

நாட்டில் எத்தனை கடுமையான சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டாலும் விபத்துகள் குறைந்தபாடில்லை. விபத்துகளில் உயிர் இழப்புகளும் குறைந்தபாடில்லை. உண்மையில் எமது பொறுப்பற்ற செயற்பாடுகள்தான் இது போன்ற விபத்துகளை உருவாக்கி விடுகின்றன.

அதேநேரம் பொலிஸாரும் இந்த வாகன விபத்துக்கள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. தவறாக நடப்பர்களுக்கு பொலிஸார் கடுமையான சட்டங்களை கடுமைப்படுத்தி, சட்டத்தை மீறி நடப்பவருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

அப்படி இல்லாமல் இந்த மனித உயிர் அழிவுகளை தடுப்பது தவிர்க்க முடியாதது. இது பற்றி அரசாங்கம் கூடுதல் அவதனம் செலுத்த வேண்டும்.

**எம்.எஸ்.எம்.ஸாகிர்**
**பிரதம ஆசிரியர்**
**துணிந்தெழு சஞ்சிகை**

# செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence -AI)




செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) என்பது கணினிகள் மற்றும் மென்பொருட்களில் மனிதனை போன்ற நுண்ணறிவை உருவாக்குவதாகும்.

இது கணினிகளை அறிவு சார்ந்த செயல்கள் மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கின்றது. உதாரணமாக, கற்றல், தீர்வு காணல் மற்றும் பரிசோதனை செய்தல் (problem-solving) போன்றவற்றை கணினியே இங்கு மேற்கொள்ளும். இன்றைய உலகில் செயற்கை நுண்ணறிவு பல்வேறு துறைகளிலும் செயற்பட்டு வருகிறது. மருத்துவம், கல்வி, வணிகம் மற்றும் பொழுதுபோக்கு மட்டுமன்றி, இராணுவம், அரசாங்க இணைய முறைமை போன்றவற்றிலும் இது முக்கியத்துவம் பெறுகின்றது.

**செயற்கை நுண்ணறிவின் வரலாறு**

செயற்கை நுண்ணறிவின் ஆரம்பம் 1950-களுக்கு பிற்பட்ட பகுதியில் அலன் டூரிங் (Alan Turing) எனும் பிரபல கணிதவியலாளரின் "Turing Test" எனப்படும் பரிசோதனையை உருவாக்குவதுடன் தொடங்குகிறது. 1956 இல் ஜான் மெக்கார்த்தி (John McCarthy) "Artificial Intelligence" என்ற சொற்றொடரை முதன்முதலில் பயன்படுத்தினார். அதன் பின் பல்வேறு காலகட்டங்களில் செயற்கை நுண்ணறிவு பல பதிப்புகளைப் பெற்று வளர்ச்சியடைந்தது.

**செயற்கை நுண்ணறிவின் வகைகள்**

1. Machine Learning: இதில் கணினிகள் முறையாக தரவுகளைப் பயன்படுத்தி அனுபவம் மற்றும் கற்றலை அடிப்படையாகக் கொண்டு தங்களுடைய செயல்களை மேம்படுத்திக் கொள்கின்றன.


2. Deep Learning: Machine Learning இன் மேம்படுத்தப்பட்ட அமைப்பே இதுவாகும். கணினி அதிக எண்ணிக்கையான தரவுகளைக் கற்பதன் மூலம் தீர்வு கிடைப்பதற்கான செம்மைத்தன்மை அதிகரிக்கிறது.

3. Computer Vision: இது கணினியை படங்கள் மற்றும் வீடியோக்களைப் புரிந்து கொள்ளும் வகையில் பயிற்சியளிக்கும் ஒரு பிரிவாகும்.

4. Natural Language Processing - NLP: இங்கு கணினி மனித மொழிகளைப் புரிந்து பதிலளிக்க கூடியதாக காணப்படும். குரல் பதிவு மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ இது நடைபெறும்.

**செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள்**

1. மருத்துவம்: செயற்கை நுண்ணறிவு மருத்துவத்தில் நோய்கள் கண்டறிதல், மருந்துகளை உருவாக்குதல் மற்றும் நோயாளி பராமரிப்பில் மிகவும் உதவுகிறது. நோயாளிகளிடமிருந்து கருத்துகளைப் பெற்று தீர்வுகளை பெற வைத்தியர்களுக்கு உதவக் கூடியதாகவும் AI முக்கியத்துவம் பெறுகிறது.




2. தொழில்நுட்பம்: நமது தினசரி பயன்பாட்டில் பல AI அடிப்படையிலான கணினி முறைமைகள் பல உள்ளன. உதாரணமாக Smart phone களை இலகுவாக பயன்படுத்தக்கூடிய வகையில் Apple இன் Siri, Alexa AI technology மற்றும் Self driving cars போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

3. வணிகம்: பல நிறுவனங்கள் வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்த AI பயன்படுத்துகின்றன. Chatbots, பொருளாதார முன்மொழிவுகள், மற்றும் சேமிப்பு பகுப்பாய்வு ஆகியவை இதில் அடங்கும்.

4. கல்வி: AI மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப தகவல்களை தேடிக்கொள்வதில், Presentation உருவாக்கத்தில், ஆய்வு ரீதியிலான விளக்கங்களை பெறுவதில் முக்கியத்துவம் பெறுகிறது.

5. பொழுதுபோக்கு: இன்றைய சினிமா துறையில் Aging மற்றும் De-Aging தொழில்நுட்பம் மூலம் வயதான நபரை இளமையாகவும், இளமையானவரை வயதானவராகவும் மாற்றியமைக்க முடியுமாயுள்ளது. AI Image Generator, AI Video Generator மூலம் எழுத்து, படங்கள் மற்றும் காணொளிகளை AI மூலம் பெறக்கூடியதாயுள்ளது.

AI-ன் வளர்ச்சி எதிர்காலத்தில் தொழில்நுட்ப மைல்கல்லாக அமையக்கூடும். அந்த நேரத்தில் மனிதர்களும் இயந்திரங்களும் இணைந்து செயற்பட்டு பல்வேறு சவால்களை சமாளிக்க முடியும். எனினும், இதன் புதிய சிக்கல்களாக போதுமான தரவு பாதுகாப்பு இன்மை, சட்டத்தின் கட்டுப்பாடுகள் காணப்படல் மற்றும் AI இனை மனித உரிமைகளைச் சேதப்படுத்தாமல் மேம்படுத்தல் போன்ற பிரச்சனைகளையும் உருவாக்கும்.

செயற்கை நுண்ணறிவு உலகத்தை மாற்றியமைக்கிறது. இது வியப்பை உருவாக்கும் ஒரு பெரும் வாய்ப்பாக உள்ளதால் அதனை எப்படி நன்மைக்கும் தேவைக்கும் பயன்படுத்துவது என்பது மனிதர்கள் இன்று துவங்க வேண்டிய மிக முக்கியமான விடயமாகும். AI-ன் வளர்ச்சி நம்முடைய எதிர்காலத்தை அழகு, நம்பிக்கை மற்றும் சவால்களுடன் மாற்றக் கூடும்.

**ஆக்கம்:**
**எம்.ஏ. அர்ஷக் அஹமட்**
**ஹிஜ்ரா லேன், பழைய வீதி**
**காத்தான்குடி**

# சிறுவர் பகுதி



## எனது செல்லப் பிராணி முயல்





தொகுப்பு:
பயாஸா பாசில்

01. எனது செல்லப் பிராணி முயல் மிகவும் அழகானது.

02. அதன் உடல் மிருதுவாக இருக்கும்.

03. அது தினமும் கரட் மற்றும் பச்சை இலைகளை விரும்பி சாப்பிடும்.

04. அது துள்ளி துள்ளி விளையாடுவது மிகவும் ரசிக்கத் தக்கது.

05. நான் அதை நேசித்து பராமரிக்கிறேன், அதுவும் என்னோடு மிகவும் அன்பாக இருக்கும்.

06. எனது முயல் எனக்கு மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் தருகிறது.

07. முயல் வெள்ளை, கருப்பு என பல நிறங்களில் காணப்படுகின்றது.

08. பிற்பகல் வேளைகளில் துள்ளித்திரியும் அதன் விளையாட்டை ரசிக்க முடியும்.

பாடசாலை மாணவர்கள் நேர முகாமைத்துவம் செய்யும் போது, அவற்றின் நேரத்தை சரியாகப் பகிர்ந்து, முக்கிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். சில பரிந்துரைகள்:

1. மாணவர்கள் தங்களின் தினசரி வேலையை திட்டமிட்டு எழுத வேண்டும். முக்கியமான பாடங்கள், திட்டமிடல்கள், மற்றும் விடுப்புகள் போன்றவற்றை முன்னுரிமை செய்ய வேண்டும்.

2. அட்டவணைகள் பயன்படுத்தி ஒவ்வொரு நாள் செய்யவேண்டிய பணிகளை குறிப்பிடுவது பயனுள்ளது.

3. ஒவ்வொரு செயலுக்கும் நேரம் ஒதுக்க வேண்டும். பரபரப்பு இல்லாமல் ஒரு செயலுக்கு மட்டும் கவனம் செலுத்துவதை பயன்படுத்த வேண்டும்.

4. ஒவ்வொரு விடயத்துக்கும் பரிசோதனை செய்து அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடுங்கள், முக்கியமானவை முதலில் செய்யுங்கள்.

5. படிப்புக்குப் பிறகு ஓரளவு நேரம் விடுப்புக்கு ஒதுக்குங்கள். இது மூளை ஓய்வுக்கு உதவும்.

இதன் மூலம் மாணவர்கள் அவர்களுடைய நேரத்தை சீராகக் கையாள முடியும்.



# பக்குவ காதல்

கண்களின் சந்திப்பில்
இதயங்கள் இடமாற
குடியிருந்தது என் இதயம் உன்னில்!

கண்கள் கதை பேச
கன்னங்கள் சிவக்க
உதடுகளும் உரச
உள்ள மெங்கும்
வெள்ளமாய் பாய்ந்தது
காதல் நீருற்று!

பருவத்தில் குளிர் காயாமல்
பக்குவத்தால் உருவான என்காதல்
சிக்கல் ஏதுமில்லாமல் சிறப்பாய் பறக்கிறது
எட்டு ரெண்டு வருடமாய்!

அன்பு அதிகமாகியதால்
சின்ன சண்டை
சீக்கிரம் போகும் கோபம்
சுருக்கென்ற வார்த்தை
எல்லாவற்றிலும் உன் காதல்!

தந்தையாய் தாயாய்
உயிர்தோழனாய் என
எல்லாமுமாய் நீ ஆகி,
எனக்குள்ளே இரண்டற கலந்து
உயிர் மூச்சாய் ஆன காதல்
உயிர் உள்ள வரை தொடரட்டும்!



ஏ.எம்.கஸ்பியா வீவி
நற்பிட்டிமுனை

# பனி மூடிய போர்



போர்க்களத்தின் புலர்ந்த
பொழுதுகள்
எதிரிகள் பற்றி
நிறைந்த அச்சங்களை தூவி
பரந்து கிடக்கின்றன.

எதிரிகளோ மறுமுனையில்
போர் நிலைகள் மறந்து
தூங்கிக் கிடக்கின்றனர்
பணிக்குடையில்!

பாதைகள் மூடி பரவிக்
கிடைக்கும் பனி மூட்டம்
மெல்லிய இருளின் குடையில்
அச்சங்களை மெல்லுகின்றன.

பல நூறு ஆயுதங்கள் மேல்
படிந்த புழுதிகள் கரைந்து
பனியாறாய் ஓடிக் களைக்க
போர் வாசம் அணைகிறது.

தூரத்தில் உரத்துக் கத்திய
குரலில் புரையோடிய பயம்
தூக்கம் பறித்து நிலைகுலைய
போர் மூட்டி பரிதவிக்க செய்கிறது

கவிப்பொய்கை
மருதமுனை

# இன்பத் தமிழும் இனிய வாழ்வும்

நான் தமிழ் தண்ணீரைக் குடிக்கிறேன்
எனக்கு தேனாக இனிக்கிறது..
அவளை பன்னீராக நான் தெளிக்கிறேன்
எனது ஊரெல்லாம்
மணக்கிறது..

தமிழ்க்கல்லை நான் நடுகிறேன்
வண்ணப் பூவாக முளைக்கிறது..
தமிழ்ச் சொல்லை நான் கூறுகிறேன்
புல்லாங் குழலாய் இசைக்கிறது..

எனது தமிழ் குளத்தில் விழுந்த
கறுந்தவளையும் தங்க மீனாகிறது..
அவள் கழுத்தில் வெறும் சங்கிலி
போடுகிறேன் வைரத்தைப் போல
மின்னுகிறது..

என்னை தமிழில் திட்டினாலும் விரும்பி
கேட்டுக் கொண்டிருப்பேன்..
வேற்று மொழியில் என்னை வாழ்த்தினால்
நான் காதுகளை மூடிடுவேன்..

எனது நாவினை தமிழ்
சர்க்கரையாக்கி விடுகிறது..
எனது வாய்க் கோப்பையில் எனது நா
தமிழ் தேனீராக தயாரிக்கிறது..
நானும் அருந்தக் கொடுக்கிறேன்
நானும் இனித்துக் கொண்டிருக்கிறேன்..

எனது முற்றத்து மல்லிகை செடிக்கு தமிழ்
சொற்களை பூக்கத்தான் ஆசை..
அதில் நான் தமிழ் புத்தாடை அணிந்து
அழகாகிறேன்..

தமிழ் அமுதுண்ட வண்டுகள் மலர்களையும்
தேனையும் வெறுக்கும்..
தமிழுக்கு கண்கள் இருநூற்று நாற்பத்தேழு
தமிழ் சேலை என்றால் பிறந்த உடனே
பெண்ணாகி இருப்பேன்..

அம்மா தந்த தமிழ் எனக்குள் சும்மா
இருக்காமல் என்னை எழுதிக்கொண்டு
இருக்கிறது.. தமிழ் இறைக்க இறைக்க நான்
பொங்கி வழிகிறேன்..

தமிழ் கடலில் விழுந்த நான் பேரலையாய்
எழுகிறேன்.. என்னை எழுப்பிவிட்ட தமிழை
நான் உறங்க விடமாட்டேன்..

எனது தமிழ் மலரில் அமர்ந்த வண்டு
கமகமக்கிறது.. தமிழ் தண்ணீர்
என்ற நிலையில் நான் குளித்துக்
கொண்டிருக்கிறேன்..

தமிழ் பகல் என்ற நான் விழித்த படியே
இருக்கிறேன்.. தமிழ் பூவில் மொய்த்த எனது
நாவென்ற பட்டாம்பூச்சி தேன் உண்கிறது..

எனது தமிழ் சிற்பிக்குள் முத்து வளர்கிறது..
குரல் வலை பின்னி நான் வீசினேன்
மொழிக்கடலில் தமிழ் மீன் சிக்கியது..

பதினெட்டு கைகளால் தமிழ் மரத்தைப்
பிடித்து அசைக்கிறேன்
தமிழ் பழங்கள் குவியல் குவியலாக
கொட்டுகின்றது..

தமிழ் குயில் பாடுகிறது இருநூற்று
நாற்பத்தேழு பாடல்கள்
நானும் தமிழ் அன்னையைப் பெற்று
எடுக்கிறேன்..

காதலிக்க ஆரம்பிக்கும் போதே திருமணம்
முடிக்கிறான் தமிழ் காதலன்..
தமிழ் நாக்கு இலட்சம் இலட்சம்
பூந்தோட்டங்களை உண்டாக்கும்
நாக்கு சோளன் வாள் என்றால் அதற்கு
தெரிந்தது வெற்றிகள் மட்டுமே!

பாசக்கவி
பாயிஸ்கரீம்
கல்முனை

# ஆளுமை அறிமுகம்



# எம்.ஆர்.எம். நிஸ்பஹான்

## மனக்கணிதத்தில் பல சாதனைகளை நிலைநாட்டி நடமாடும் கல்குலேட்டர் என்று பலராலும் அழைக்கப்படுகின்றார்

இலங்கையைப் பொறுத்தவரை கணிதம் என்பது ஒரு சவாலான விடயமாகவே இன்னும் பார்க்கப்படுகிறது. அதில் சித்தியடையும் வீதமும் ஏனைய பாடங்களுடன் ஒப்பிடும் பொழுது குறைவாகவே உள்ளது. என்றாலும் மலையகத்தில் நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.ஆர். எம். நிஸ்பஹான் மனக்கணிதத்தில் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். அவர் நடமாடும் கல்குலேட்டர் என்று பலராலும் அழைக்கப்படுகின்றார். இவர் மனக்கணிதம் மற்றும் இலக்கங்களும் அவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் ஆய்வு செய்வதை பொழுது போக்காக ஆரம்பித்து தற்போது அதனைத் தொழிலாகவும் செய்கின்றார். தற்போது Business data Analystics துறையில் காலடி எடுத்து வைத்துள்ள இவர், பிசினஸ் மேனேஜ்மென்ட் பாடநெறியையும் தொடர்கிறார். இவர் பகுதி நேர Mind Math Trainer ஆகவும் பணியாற்றுகிறார். இம்மாத துணிந்தெழு சஞ்சிகையின் ஆளுமைப் பகுதியை அலங்கரிக்கும் அவரின் செவ்வி இதோ:

**கேள்வி:**

அஸ்ஸலாமு அலைக்கும், துணிந்தெழு சஞ்சிகையின் ஆளுமை பகுதியில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி. அதேநேரம் நிஸ்பஹான் என்று சொன்னால் இலங்கை தொலைக்காட்சி ரசிகர்களுக்கு மிகவும் பரீச்சயமான ஒரு பெயர். அதற்கு காரணம் என்ன?

**பதில்:**

2013 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை நெருங்கும் நாட்கள் அது. பல வருடங்களாக

எனது சிந்தனைக்குள் பூட்டி வைத்திருந்த, இயல்பாகவே புதிதாகச் சிந்திக்கும் அந்த கணித விடயத்தினை எனது கணிதப்பாட ஆசிரியையிடம் முறையாக முன் வைத்தேன்.

அப்போது கணித தின நிகழ்வும் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆகவே, ஆசிரியையின் பாராட்டு மேடையேறியது. ஆம் இதுவே ஆரம்பம். இவ்வாறு தொடங்கிய எனது இந்தப் பாதை முற்றுப்புள்ளியில்லாமல் இன்று வரை ஓடிக் கொண்டிருப்பது எனக்கே ஆச்சரியம். அல்ஹம்துலில்லாஹ்!

அடுத்து என்ன செய்வது? எனது பாதை என்ன? எனும் வினாவோடு என் பாதையைத் தொடர்ந்தேன். இதன் தொடரில் கணித நுட்பங்களை ஓரிரு வருடங்களில் YOUTUBE தளமூடாக கற்று முடிக்க முடிந்தது.

2014 ஆம் ஆண்டு "எனது கணிதம்" என்ற எனது கன்னி நூல் வெளியானது. பின்னர் அமெரிக்க கணித பேராசிரியர் ARTHUR BENJAMIN இன் மனக்கணித காணொளியின் மூலம் ஈர்க்கப்பட்டு, 6 மாத பயிற்சி மூலம் 2015 ஆம் ஆண்டு மனக்கணித நிகழ்வொன்றை நடாத்தி ரசிகர்களின் மனங்கவரும் வாய்ப்பை இறையருளால் பெற்றுக் கொண்டேன்.

அதே ஆண்டில் முதன் முதலாக நேத்ரா தொலைக்காட்சியில் "ஜெய்க்கலாம் வாங்க" எனும் நிகழ்ச்சியில் வாய்ப்பு கிடைத்தது. அடுத்து 2016 ஆம் ஆண்டு தேசிய புத்தாக்க ஆணைக்குழுவினால் வருடாந்தம் நடாத்தப்படும் போட்டியில் பங்குபற்றினேன். அதன் பின்னர் இத்துறைக்கான சிறந்த தொழில்சார் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முயன்றேன். காரியம் கைகூடவில்லை. தோல்விதான் பதிலாகக் கிடைத்தது. பின்னர் வியாபாரமொன்றைத் தொடங்கலாமென




எண்ணம் கொண்டேன். ஓய்வு நேரங்களில் கணிதம்சார் சிந்தனையைத் தொடரலாமென முடிவு செய்தேன். அதற்கான முதலீட்டுத்தேவை நிறைவு செய்ய ஏதாவது செய்ய வேண்டுமே என்று சிந்தனையில் ஓடும் அந்நாட்களில் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தடைந்தது. அதுதான் அதேதான் தேசிய அளவில் கடல் கடந்து திறமையை வெளிக்காட்டும் வாய்ப்பைப் பெற்ற அழைப்பு.

நாடளாவிய ரீதியில் இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் அந்த போட்டி நிகழ்ச்சியை ITN தொலைக்காட்சி வழங்கியது. அதற்கான இடவசதி மற்றுமுண்டான பொறுப்பை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்றுக் கொண்டது. சுருக்கமாக இப்போட்டியைப் பற்றி சொல்ல வேண்டுமெனில், 2018 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இரண்டாமிடம் பெற்றுக் கொள்ள முடிந்தது. அல்ஹம்துலில்லாஹ். பின்னர் பல பாடசாலைகள், கல்வி நிலையங்களில் வாய்ப்புக் கிடைத்தன. காலங்கள் உருண்டோடின. பின்னர் கொரோனாவின் பிடியில் சிறைப்பட்டு, அதிலும் ஓர் ஆராய்ச்சியைத் தொடங்க முடிந்தது.

கணிதம் கற்கும் திறனைப் பரிசோதிக்கும் ஒரு முறையை இறையருளால் கண்டறிந்தேன். பின்னர் 04 வருடங்களாக zoom ஊடாக




மனக்கணிதம் சார் பாடநெறி. அதன் பின்னர் ஆசிரியர்களுக்கான பாடநெறி. அதன் பின்னர் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பாடநெறி என புதிய பாடநெறிகளில் முன்னேற்றம் கண்ட சந்தர்ப்பத்தில், தொழில்ரீதியாக இத்துறையினை மாத்திரம் தொடர்வது கடினமான நிலை ஏற்பட்டது. மீண்டும் தடுமாற்றம், பின்னடைவு, அடுத்து என்ன என்ற கேள்வி எழுந்தபோது SIRASA தொலைக்காட்சியில் SRILANKA'S GOT TALENT SEASON 02 - 2024 ஆரம்பமானது.

2018 இல் வென்ற வெற்றியின் இரகசியத்தை இன்னும் மெருகூட்டியவாறு பங்குபற்றினேன். முதல் சுற்றிலிருந்து நேரடியாக மூன்றாம் சுற்றுக்கு நடுவர்கள் தெரிவு செய்தனர். மூன்றாம் சுற்று அதாவது காலிறுதிப்போட்டி ஆரம்பமானது.

போட்டியாளர்களின் திறனை ஆராய்ந்து பலமறிந்து நானும் முன்னேற முயன்றேன். அரையிறுதிக்கான தெரிவு நேரம் நெருங்கியது. ஆறு பேர் நாங்கள். அதில் மூன்று பேர் மாத்திரமே தெரிவு செய்யப்படுவர். நானும் தெரிவு செய்யப்படுவேன் என நம்பிக்கையுடன் இருந்தேன்.

முதல் இரண்டாமவர் என தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இன்னும் ஒருவருக்கே வாய்ப்பு. அந்நொடியில் நடுவர்கள் செய்த அறிவிப்பால் நடுங்கிப்போனது வெற்றிக்கனவு. ஆம் வேறு ஒரு போட்டியாளரை அடுத்த சுற்றுக்கு நடுவர்கள் தெரிவு செய்தார்கள்.

அதன் பின்னர் தொழில் வாழ்க்கை படிப்படியாக பின்னடைவைச் சந்திக்க நேரிட்டது. சுருக்கக்கூறின் இதுவே எனது வாழ்க்கையில் நான் சந்தித்த பெரிய சவால். பின்னர் எனது துறையோடு மிக நெருக்கமான ஒரு துறையில் இணைந்து தொழிற்பயிற்சி, கல்வியைப்பயின்று கொண்டிருக்கிறேன். இறையருளால் முன்னேற்றம் கண்டுகொண்டிருக்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்!

**கேள்வி: மிக நீண்ட தூர பயணத்தைக் கடந்து வந்துள்ளீர்கள். உங்கள் ஆற்றல்களை ITN சுயாதீன தொலைக்காட்சியில் காணும் வாய்ப்பு எமக்கும் கிட்டியது. இம் மனக்கணக்கு கணிதத்துறையை தேர்ந்தெடுக்க ஏதாவது விசேட காரணங்கள் உண்டா..? அத்தோடு அதற்கான பயிற்சிகளை எவ்வாறு மேற்கொண்டீர்கள்?**

பதில்:
இத்துறையைத் இவ்வாறே தெரிவு செய்தேன். அதாவது சிறு வயதிலிருந்தே (INVESTIGATIVE) சார்ந்த ஆழ்ந்த சிந்தனைசார் இயல்பிலேயே ஊற்றெடுத் -திருந்தது. அதற்கான

காரணங்கள் பல இருந்தபோதிலும் முக்கியமான காரணம் குடும்பப்பின்னணி. இதனை இரண்டு வகைப்படுத்திக்கூறினால் முதலாவதாக நான் எனது முழுக்குடும்பத்திலும் எனது பரம்பரையில் கடைக்குட்டி. ஆகவே, சிறு வயதிலிருக்கும் போது சமவயதில் யாரும் இருக்கவில்லை. நட்பு வட்டமும் சிறியது. ஆகவே, தனியாக வீட்டிலிருந்து ATLAS புத்தகம் பார்ப்பதே வேலை. ஆம், தற்போது GOOGLE MAP ஆக மாறியுள்ள அன்றைய புத்தக வடிவமே ATLAS BOOK எனச்சுருக்கமாகச் சொல்லலாம். அதிலிருக்கும் MAP ஐ அவதானித்து கற்பனை செய்தவாறு நடத்தலே எனது பொழுது போக்கு. அடுத்து எனது குடும்பத்திலே தந்தை, சிறிய தந்தை ஒரு கணக்காளர், சகோதரர் பட்டம் பெற்ற கணக்காளர், மற்றைய சகோதரர் வங்கியியல் துறைசார்ந்தவர் என்ற நிலை காரணமாக இயல்பிலேயே ஒரு கணிதம் சார் ஆய்வுசார் மனநிலையிலேயே என்னைத் தக்கவைக்கத் தூண்டியது. ஆம். இதுவே முக்கியமான மாற்றத்தின் அடித்தளம். தரம் 8 ஆம் ஆண்டில் எனது கணித ஆசிரியையின் முதல் நாள் வகுப்பு. அந்நாளில் வாய்ப்பாடு வினாவைத் தொடுத்த போதே கணித ஆற்றல் வெளிக்கொணரப்பட்டது.

அதன் பின்னர் உயர்தர இறுதிப் பகுதியில் அடுத்தகட்டத்திற்கு நகர்ந்தது. இதில் மனக்கணிதப் பயிற்சியை மேற்கொண்ட சந்தர்ப்பம். 2014 ஆம் ஆண்டு அமெரிக்க பேராசிரியர் arthur benjamin அவர்களின் மனக்கணித காண்பித்தல் நிகழ்வினை YOU TUBE ஊடாகக் கண்டதுமே முதல் நாள் பயிற்சியாக அமைந்தது. அவர் இரண்டாம் அடுக்கு கணக்குகளை செக்கன்கள் அளவில் செய்து முடிப்பார். அதே அந்தப் பயிற்சியை தொடர்ச்சியாக 6 மாத காலம் பயிற்சி செய்து கிட்டத்தட்ட அவரின் வேகத்தினை நெருங்கினேன். அல்ஹம்துலில்லாஹ்!

கேள்வி:

இத்துறைக்கு வருவதற்கு உங்கள் குடும்பப் பின்னணியும் காரணமாக அமைந்துள்ளது. வாழ்த்துக்கள். அதேநேரம் பெருக்கல், வகுத்தல், கழித்தல், கூட்டல் என்பவற்றின் மடங்குகளைக் கேட்டவுடன் சில செக்கன்களில் ஒப்புவிப்பீர்கள். அதுவும் நான்கு, ஐந்து டிஜிட் பெறுமானங்களை. இதனை எவ்வாறு செய்கின்றீர்கள்? அடிப்படை கணித முறைகள் ஏதாவது பயன்படுத்துகிறீர்களா?

பதில்:

இக்கேள்விக்கான பதிலை மாணவர்கள் நன்கு கவனிக்கும் படி வேண்டிக் கொள்கின்றேன். முதலில் செயன்முறையை மூன்று கட்டங்களாக வகுத்துக்கொள்வேன். I.M.P இதில் I-interest ஆர்வம். ஆர்வம் அதிகரிக்கும் போது அதனை ஈர்க்கும் ஒருவகை சக்தி அதிகரிக்கின்றது. ஆகவே இதனடிப்படையில் prof: arthur benjamin போன்றவர்களின் videos பார்ப்பதன் மூலம், இப்பயிற்சியின் மூலம் கிடைக்கும் மூளைக்கான பெறுமதி அதிகரிப்பு ஆகியவற்றைக் கொண்டு ஆர்வத்தை அதிகரித்துக் கொண்டேன். அடுத்து M-METHOD எனக்கு விருப்பமானதொரு கணித நுட்ப முறையைப் பயன்படுத்தி எழுதி பயிற்சி செய்து நன்கு பரீட்சயமாக்கிக் கொண்டேன். அதன் பின்னர்தான் P-PRACTICE பயிற்சியின் இரகசியத்தைப் பின்பற்றினேன். ஆம்! இது மூளையின் ஓர் அதிசயம் எனலாம். புரியாத புதிராயினும் முதல் நாள் நன்கு பயிற்சி செய்தும் விடை காண்பது அல்லது முன்னேற்றம் காண்பது கடினமாகவே இருந்தாலும் அதே விடயத்தை சிந்தித்துவிட்டு நாம் உறங்கும் போது எமது மூளை அதற்கான விடையை

நெருங்கும், அல்லது முன்னேற்றம் காணும் என்ற நுட்பத்தினை அறிஞர்களிடம் கேட்ட ஞாபகம் அன்று எனக்கு இருந்தது. இதனடிப்படையில் ஒருநாள் பயிற்சி செய்தால், அடுத்த நாள் முன்னேற்றம் காணும் என்றால் தொடர்ச்சியாக பல நாட்கள் ஒரே விடயத்தினைப்பயிற்சி செய்தால் எப்படி இருக்கும் என்று கணித்து 180 நாட்கள் அதாவது ஆறு மாதங்கள் தொடர்ச்சியாகப் பயிற்சியினை மேற்கொண்டேன். கல் போன்றிருந்த அக்கணிதமுறையைப் பயிற்சியின் வழியே கரைக்க முடிந்தது அல்ஹம்துலில்லாஹ்!

கேள்வி:

“எனது கணிதம்” என்ற நூல் வெளியிட்டிருப்பதாக கூறினீர்கள். அந்தப் புத்தகத்தின் மூலம் மாணவர்களும் ஏனையோர்களும் கணிதத்தை இலகுவாக கற்றுக் கொள்ள வசதி உண்டா? அந்நூலை எங்கு பெற்றுக் கொள்ளலாம்? அது பற்றிய தகவலைத் தருவீர்களா?

பதில்:

இந்நூலானது 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. நூல் பிரதிகள் எதுவும் இப்போது என்னிடமில்லை.

கேள்வி:

இலங்கை தொலைக்காட்சி தவிர்ந்து வேறு எந்தப் போட்டிகளில் பங்கு பற்றி விருது பெற்றுள்ளீர்கள்? அத்தோடு, இலங்கையைத் தவிர்த்து வெளிநாடுகளில் ஏதும் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியதா?

பதில்:

2018 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் அனஸ் அப்பாஸ் எழுதிய “தேசிய சாதனை மடல்” நூலில் எனது பெயரும் இடம் பெற்றிருந்தது. Creative pool நிறுவனம் 2022 ஆம் ஆண்டு நடாத்திய விருது நிகழ்வில் "MIND BLOWING TALENT OF THE YEAR" விருது கிடைத்துள்ளது.

அடுத்து கலாம் சர்வதேச தங்க விருது "BEST ACHIEVER OF THE YEAR 2023" பதக்கமும் வென்றுள்ளேன்.

கேள்வி:

உங்கள் நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களுக்கு உங்கள் திறமை புரிந்திருக்கும். அதேநேரம் ஒரு நிகழ்ச்சியில் நடுவர்கள் உங்களை நடமாடும் மனித கால்குலேட்டர் எனக் கூறியது ஞாபகம் உள்ளது. வெளிநாட்டில் நடைபெறும் Talent ஷோவில் கலந்து கொள்ள ஏதும் முன்னெடுப்புகள் செய்கின்றீர்களா?

பதில்:

ஆம்! ASIA'S GOT TALENT, AMERICA'S GOT TELNT, போன்ற நிகழ்வில் கலந்து கொள்ள முயற்சித்துள்ளேன். தற்போது தொழில் ரீதியான முன்னேற்ற தேவை கருதி எனது திசையை உயர்கல்வியின் பக்கம் சிலகாலம் மாற்ற வேண்டியுள்ளதால் தற்காலிகமாக இந்த முயற்சியை நிறுத்தியுள்ளேன்.

கேள்வி:

கணிதம் என்றாலே இன்றும் கூட மாணவர்களுக்கு கசப்பாக உள்ளது. மிகவும் சிரமப்படுகின்றனர். அதேநேரம் சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெறும் விகிதம் ஏனைய பாடங்களுடன் ஒப்பிடும் பொழுது குறைவாகவே உள்ளது. இதற்குக் காரணம் என்ன? இதனை நிவர்த்தி செய்ய அகில இலங்கை ரீதியில் உங்களால் ஏதாவது முன்னெடுப்புகள் செய்ய முடியுமா?

பதில்:
கணிதம் கடினமாகவிருப்பதன் பொதுவான காரணங்களை இரண்டு வகையாகப்பிரித்து நோக்கலாம். முதலாவது, கற்றுக் கொள்ளும் திறன் குறைபாடு (LEARNING DISABILITIES).

இரண்டாவது, எதிர்மறை "எண்ணங்கள் மற்றும் பண்புகள்" சார் காரணிகள்.
எனது ஆய்வு, கற்பித்தல் அனுபவத்தின் அடிப்படையில் இதற்கான காரணங்கள் சிலதைக் கண்டறிந்துள்ளேன். இதில் நவீன உலகத்தில் முக்கிய காரணி என்பதால் முன்வைக்கின்றேன். இது மாற்றிக் கொள்ள வேண்டிய ஒன்று அதுதான் "கவனக்குறைவு"

இப்படியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறையாக..

ARIFICIAL INTELLIGENT, DATA SCIENCE, DATA ANALYTIC, DATA ENGINEERING, BUSINESS ANALYTICS, ACCOUNTING, ENGINEERING என்று பல துறைகளில் மிளிர உதவும். இக்கணிதத்திற்கான அடித்தளமமைக்க "5C MATH MIND TESTING SOLUTION MIND ARITHMETICAL TRAINING" போன்ற முறையினூடாக பயிற்சிகளை மேற்கொள்கின்றேன். ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கியுள்ளேன். நீண்டகால மற்றும் அபாரமான தீர்வாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கணிதப்பயிற்சிகளை வழங்கியுள்ளேன். தேசிய வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் அதற்கான திட்டமிடலையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றேன்.

கேள்வி:
தற்போது நீங்கள் மனக்கணக்கில் கணக்குகள் செய்வது சம்பந்தமாகவோ அல்லது பாடசாலை மாணவர்களுக்கு கணித வகுப்புகள் ஏதாவது பயிற்றுவிக்கின்றீர்களா? அதாவது அவர்களுக்கான வகுப்புகள் செய்கின்றீர்களா? அப்படியாயின் அதில் இணைந்து கொள்வது எப்படி?

பதில்:
ஆம்!
"கணித கணித்தல் திறனைப் பட்டை தீட்டும்" பாடநெறிகள் online ஊடாக நடைபெற்று வருகின்றது. எனது whatsapp ஊடாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம், இணைந்து கொள்ள முடியும். அழையுங்கள்-0774047854

கேள்வி:
இத்துறையில் இருக்கும் பொழுது உங்களுக்குக் கிடைத்த பாராட்டு அல்லது மறக்க முடியாத சம்பவங்கள் ஏதாவது இருப்பின் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்?

பதில்:
ஐந்து வருடங்களுக்கு முன்பாக கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்திருக்கும் "SRILANKA TOURISM BOARD" இற்கு ஆலோசனை பெறும் விடயமாகச் சென்றிருந்தேன். மாலை நேரம் 15 நிமிடங்கள் தாமதம் வேறு. பின்னர் அவ்விடத்தை அடைந்தேன். சாதாரண தோற்றத்தோடு அந்த இடத்தில் இருந்தது நான் மாத்திரமே! தயக்கத்தோடு Reception hall இல் "தலைவரின் அறை எங்கே" என்று சிங்கள மொழியில் கேட்க, அவர்களும் அவ்விடத்தைக் காட்டினார்கள். நான் அவ்விடம் நோக்கி நகர்ந்தேன். அவ்விடத்தை அடைந்ததும் எனக்காக தரப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தேன். நான் சந்திக்கச்சென்ற அந்த உயர் இடத்தில் இருந்த அதிகாரி என்னை நல்லமுறையில் உபசரித்து வரவேற்றார். அப்போது ஆச்சரியமாக இருந்தது. இவ்வமைப்பில் இருந்த மற்ற அதிகாரிகளையெல்லாம் கடந்து

வந்தேன். அவர்களை விட உயர் அதிகாரி இவர் இவ்வமைப்பின் இலங்கையினுடைய தலைவர் வேறு, தயக்கத்தோடு வந்த எனக்கு சாதாரணமான ஒருவனாக வந்த எனக்கு இப்படி வரவேற்பா? பின்னர் எனது விடயமாக ஓர் ஊடகவியலாளரோடு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார். அதில் சிங்கள மொழியில் என்னை "நண்பர் வந்துள்ளார்" என்று இவ்வாறு அறிமுகம் செய்தார்" ஆ.. ஆ.. நண்பரா? மாதாந்தம் இலங்கையிலே அதிக சம்பளம் பெறும் பிரதான கட்டளையிடும் அதிகாரி SL TOURISM BOARD இன் தலைவர் இவர், என்னோடு இவ்வளவு நல்ல முறையில் நடந்து கொள்கிறாரா? என்று வியந்தேன். ஆம்! அந்த நற்குணத்திற்கு சொந்தமானவர்தான். தொலைக்காட்சியில் மாத்திரமல்லாமல், திரைக்கு பின்னாலும் சிறந்தவராகத் திகழ்பவர். இரண்டு கலாநிதிப் பட்டம், சிறிய வயதிலேயே C.E.O.பதவியை அடைந்த, ITN YOUTH WITH TALENT 2018 போட்டியின் ஒரு நடுவராகச் செயற்பட்ட, MR.KISHU GOMES அவர்கள், ஓர் அதியுயர் அதிகாரியாக மாற அவரது நற்பண்பு, நல்லொழுக்கம் காரணமாக இருந்துள்ளது என்ற இவ்விடயம் இன்னும் மறக்கவில்லை. காரணம் அவர் இன்னும் எனக்காக தேவையின் போது நேரம் ஒதுக்குபவர்.

**கேள்வி:**
**உங்கள் துறையில் நீங்கள் முன்னெடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பொருளாதார ரீதியிலான சவால்களைச் சந்தித்துள்ளீர்களா? எதிர்வரும் காலங்களில் ஏசியா டேலண்ட், அமெரிக்கா டேலண்ட் போன்ற டேலண்ட் ஷோக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை எதிர்பார்த்து உள்ளீர்கள். அதற்கான நிதி உதவிகள் உங்களுக்குப் போதிய அளவு கிடைக்கின்றனவா?**




பதில்:
ஆம்! சர்வதேச மேடையை அடைய, உயர் கற்றல் நடவடிக்கைகளில் பொருளாதார சவால்கள் காணப்படுகின்றன.

**கேள்வி:**
**உங்களுடைய நிகழ்ச்சிகளை, உங்களுடைய ஆளுமைகளை பார்ப்பதற்குரிய யூடியூப் தளம், மற்றும் முகப்புத்தகம் ஏதாவது உள்ளதா? அப்படியாயின் அதனை இங்கு பதிவு செய்யுங்கள். ஏனையோரும் அதன் மூலம் பயன் பெறுவார்கள்?**

பதில்:
2018 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியின் YOUTUBE VIDEO வைக் கண்டுகளிக்க "NISFAHAN YOUTH WITH TALENT" என்று TYPE செய்தால் பெற்றுக்கொள்ளலாம்.




**கேள்வி:**
**எமது துணிந்தெழு சஞ்சிகை பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்:
துணிந்தெழு சஞ்சிகையானது எழுத்தாளர்களுக்கான களம், Sky Tamil பற்றி நான் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், நான் 2023 ஆம் ஆண்டு KALAM INTERNATIONAL GOLDEN AWARD வென்றவுடன் அந்த செய்தியை ஒளிபரப்புச் செய்திருந்தது. அதற்காக நன்றி தெரிவிக்க தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே, இச்சமூக முன்னேற்ற அமைப்பான Sky Tamil மற்றும் துணிந்தெழு சஞ்சிகை மென்மேலும் வளர உளமார வாழ்த்துகிறேன்.



செவ்வி கண்டவர்
திருமதி.ஷாமென் நிஸாம்டீன்
துணிந்தெழு சஞ்சிகை


# எனது விழிகள்

## கருப்பொருள் : வாகனங்கள்

இம்மாத சிறந்த புகைப்படம்



நிஸ்பா நஸார் - கன்னத்தோட்டை





தனுஜா
மாத்தளை



நுஸ்ரான்
நிந்தவூர்



ராஜ்ஜ் ராஜயோகன்
கத்தார்



எம். சபாத் அகமட்
பொத்துவில்



ஹூஸைன் பாஸால்
கனடா



ஏ.எஸ்.எம். நளீர்
அநுராதபுரம்

# பேசும் பேனாக்கள்



மொட்டுக்கள் சிந்தும் அமிர்தம்.

நான்காவது ஆண்டு நிறைவில் 38 ஆவது துணிந்தெழு இதழ் சென்ற மாதம் பல்வேறு சுவாரஸ்யமான பயனுள்ள அம்சங்களைக் கொண்டே பிரசுரம் செய்யப்பட்டது.

இம் மாதம் ஐந்தாவது ஆண்டின் முதல் படியில் 39 ஆவது இதழில் தடம் பதிக்கும் துணிந்தெழு சஞ்சிகை இன்னும் பல்லாண்டு காலம் மிளிர வேண்டும் என்ற பிரார்த்தனையுடனும் வெற்றிவாகை சூட வேண்டுமென்ற வாழ்த்துச் செய்தியோடும் எம்மை வந்தடைகிறது.

இதில் தொடராக “பேசும் பேனாக்கள்” பகுதி நிறைந்த அனுபவங்களுடன் பெருமளவிலான நூல்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றது. இங்கு இலக்கியக் கிடங்கில் உள்ளடங்கலாகவுள்ள கவிதை, நாவல், கட்டுரை, அனுபவப்பகிர்வு என இன்னோரன்னவைகளைக் கொண்டே நூல்கள் தர வரிசைப்படுத்தப்பட்டு சிற்றறிமுகம் செய்யப்படு-கின்றன.

பேசும் பேனாக்கள் பகுதி வாசகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பையும் எதிர்பார்ப்பையும் கொண்டுள்ள சிறந்த பகுதியாக உருப்பெற்று வரும் என்ற மேலான எண்ணத்தை விதைத்தவனாகவும் அல்லது எதிர்பார்த்தவனாகவும் தொடர்கிறேன்.

“நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கிவந்து என்னைச் சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன்” என்ற ஆப்ரகாம்லிங்கனின் பொன் மொழியுடன் நூல்கள் அறிமுகத்தின் முதல் பணியை அலங்காரம் செய்கிறேன்.

பேசும் பேனாக்கள் அருவியில் நனைந்து அதன் இன்ப துன்பங்களை நன்கு பருகி பின் பெரும் நதியில் குளித்து அனுபவம் கொண்ட வாசகப் பெருந்தகைகளின் எண்ணிலடங்காத பின்னூட்டங்கள் இன்னும் எழுதவும் வாசிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் வித்திடுகிறது என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன்.

எழுத்தும் வாசிப்பும் ஒரு மனிதனை முழுமைப்படுத்துகின்றது என்ற வாசகத்தின் விளைவாக வாசிக்கவும் அதைப்பற்றி எழுதவும் எனக்கு இங்கு வாய்ப்பு கிடைத்திருப்பது பெரும் பாக்கியமாகக் கருதி என் அனுபவங்களை அரங்கேற்றி, வாசகர்முன் பின் குறிப்பு எதிர்பார்த்து நிற்கிறேன்.

ஆங்காங்கே தினமும் பல்வேறுபட்ட புத்தகப் பிரசவங்கள் இடம்பெறுகிறன. அதில் சில எமக்கு தெரியக்கூடும். இன்னும் சில நாம் அறியாமலே நடந்தேறிப் போகின்றன.

அவ்வாறு தெரிந்தும் தெரியாமலும் நடந்தேறிப்போகும் புத்தகங்களை ஒரு தனி மனிதனின் வாசிப்பு குறிப்பேட்டிலிருந்து அனுபவப் பகிர்வாக வாசகர்களின் வாசிப்புப் பணிக்கு உந்து சக்தியாக வழங்குவதே எமது நோக்கமாகும்.

அது மட்டுமல்லாது காலங்கள் கடந்து வெளியீடு செய்யப்பட்ட நூல்கள் பலருக்கு தெரியாது இருக்கக்கூடும். அவ்வாறாக இருக்கின்ற நூல்களைத் தேடி அவைகளை அறிமுகம் செய்வதும் எமது நூல் அறிமுகத்தின் மற்றுமோர் நோக்கமாகும்.

இதற்கு முன்னரும் இங்கு பல்வேறுபட்ட நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டன. அவைகள் வாசகர்களின் வாசிப்புப் பணிக்கு பெரிதும் உதவியதாக சில பின்னூட்டங்கள் கிடைத்தன. இன்னும் சில வாசகர்கள் கொள்வனவு செய்து கொள்ளும் விதத்திலும் உதவியாக இருந்ததையும் அறியக் கிடைத்தது. இந்த மாதம் சில நூல்களை உங்களின் அறிவுக்கு

விருந்தாகத் தருகிறேன். அவைகளின் அனுபவப் பகிர்வுகளை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். இச்சஞ்சிகையின் அடுத்த பகுதியான நூல்கள் விமர்சனப் பகுதிக்கு உங்களுடைய அனுபவப் பகிர்வு விமர்சனப் பார்வையை எதிர்பார்த்து நிற்கிறேன்.

உங்களுடைய நூல்களும் இங்கு அறிமுகம் செய்யப்பட விரும்பினால், அவைகள் எமது பகுதியில் பிரசுரம் செய்யப்பட வேண்டுமானால் கீழ்காணும் முகவரிக்கு உங்களுடைய நூல்களை அனுப்பி வைக்கலாம்.

**எம்.ஜே.ஜவ்சன் அஹமட்
பேசும் பேனாக்கள் பகுதி
துணிந்தெழு சஞ்சிகை,
148, வீசி வீதி,
பெரிய நீலாவணை 02,
மருதமுனை, கல்முனை.**





01

நூல் :- யதார்த்தம்
ஆசிரியர் :-பஹ்ரியா பாயிஸ்
வகை :- தத்துவங்கள் தொகுப்பு
பக்கங்கள்:- 120
வெளியீட்டகம் :- மூதூர் ஜே.எம்.ஜே
விலை :- 650
பதிப்பு :- 2025
தொட.இலக்கம்:- 0756196390

வாழ்க்கைக்குத் தேவையான தனிமனித வாழ்வியலின் வெற்றிக்குத் துணை போகின்ற சுமார் 330 தத்துவங்களை உள்ளடக்கியதாக வெளிவந்திருக்கும் யதார்த்தம் எனும் குறித்த இந்த நூல் வாசிக்கின்ற போது, தன்னம்பிக்கையைக் கொடுத்து சாதிக்க வேண்டும் அல்லது ஒழுக்க சீலனாக வளர வேண்டும், ஒரு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும், அன்போடு வாழ வேண்டும், எல்லோரையும் அரவணைக்க வேண்டும், போன்ற உளம் சார்ந்த எண்ண அலைகளைத் தோற்றுவிக்கின்றது.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் வாசிக்க வேண்டிய அல்லது அனைவராலும் வாசிக்கப்பட வேண்டிய ஒரு காலத்தின் தேவை என இந்த நூலை என்னால் கருத முடிகிறது. காரணம் ஒரு குறித்த துறையை மட்டும் முற்படுத்தாது பல்வேறு துறைகளில் நூலாசிரியரின் பயணத்தில் எழுதி, முகநூலில் அல்லது இதர இடங்களில் வாசகர்கள் மத்தியில் பெரும் மதிப்பை வென்ற தத்துவங்களே இங்கு நூல் உட்படுத்தப்படுகிறது.

இங்கு மழை பொருட்களைத் தருகின்ற தத்துவங்களைக் காணக் கிடைக்கவில்லை. இருப்பினும், நேரான சிந்தனையோடு ஒருவரை வழிநடத்துகின்ற மிக அதிகமான தத்துவங்களை என்னால் காண முடிந்தது. ஆகவே, நீங்களும் இப்பிரதியை வாங்கி படித்து பயன் பெறலாம்.




02


நூல் :- பூக்களோடு சில நிமிடம்
ஆசிரியர் :- ஆ.லெ.மு. இர்ஷாத்
வகை :- கவிதை
பக்கங்கள்:- 80
வெளியீட்டகம் :- ASSPEK வெளியீடு
விலை :- 500/=
பதிப்பு :- 2023

வாழைச்சேனையைப் பிறப்படமாகக் கொண்ட கவிஞர் இர்ஷாத் அவர்கள் எழுதிய புதுக்கவிதைகள் அடங்கிய தொகுதியே இது.

2023 ஆம் ஆண்டு வெளியீடு செய்து வைக்கப்பட்ட இந்த நூல் எதார்த்தமான பல்வேறு தலைப்புகளின் ஊடாக கவிதை சொல்கின்ற விதத்தினை சற்று வியப்புடன் பார்க்க முடிகின்றது.
கவிஞர் இர்ஷாத் அவர்களின் எண்ணத்தில் உருவாகிய சில பொதுவான தலைப்புகளில் எழுதப்பட்டிருக்கும் இந்த கவிதைகள் வாசிக்கின்ற போது பல்வேறு அம்சங்களை உள்ளத்தில் உதிக்கச் செய்கின்ற ஒரு யுக்தியைக் கொண்டதாக அமைந்திருக்கிறது.

அதிலும் குறிப்பாக, இங்கு நூலுருப்படுத்தப் பட்டிருக்கும் ஒவ்வொரு கவிதைகளும் தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டவை என்பது இங்கு இக்கவிதைகளின் கூடுதல் சிறப்பம்சத்தை வெளிக்காட்டுவதாக அமைகிறது.

இந்த நூலுக்கு தமிழ் நெஞ்சம் அமீன் அவர்கள் பிரான்சிலிருந்து வாழ்த்துச் செய்தி வழங்கியிருப்பது இந் நூலுக்கான இன்னும் ஓர் அங்கீகாரத்தை மக்கள் மையப்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகவே என்னால் கருத முடிகிறது. ஆகவே, நூலாசிரியரிடம் இருந்து நூலைப் பெற முடியும். பின்பு வாசித்து உங்களின் அனுபவப் பகிர்வுகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளவும் முடியும்.




03

நூல் :- மூன்றாம் பிறை
ஆசிரியர் :- மம்முட்டி
தமிழில் :- கே.வி. ஷைலஜா
வகை :- வாழ்வனுபவங்கள்
பக்கங்கள்:- 128
வெளியீட்டகம் :- வம்சி
விலை :- இந்திய மதிப்பு 100/=
பதிப்பு :- முதல் பதிப்பு 2010
ஐந்தாம் பதிப்பு 2019
தொடர்பு:- வம்சி புக்ஸ்
திருவண்ணாமலை

தமிழ் மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட நூல்களின் வரிசையில் மூன்றாம் பிறை எனும் இந்த நூலையும் காணக் கிடைக்கிறது. இது திரைப்பட நடிகர் இயக்குனர் மம்முட்டி அவர்களின் வாழ்வியல் அனுபவங்களைச் சொல்கின்ற ஒரு நூலாகும்.


இந்த நூலை மொழி மாற்றம் செய்தவர் கேரளாவைப் பூர்வீகமாகக் கொண்டு தமிழ்நாட்டில் திருவண்ணாமலையில் வசித்து வருகின்ற ஷைலஜா அவர்கள். இவர் "பாலச்சந்திரன் சுள்ளிக்காட்டின்" சிதம்பர நினைவுகள் மூலம் தமிழ் மொழிபெயர்ப்புத் துறைக்கு அறிமுகமாகியவர்.

மூன்றாம் பிறை எனும் இந்த நூலையும் மிக அழகான மொழி நடையில் வாசகர்களை கவரும் விதத்தில் மொழியாக்கம் செய்திருக்கிறார் ஷைலஜா அவர்கள். இதில் மொத்தமாக 23 தலைப்புகள் இடம் பெறுகின்றன. வாழ்நாளில் தன் பெயரோடு ஆரம்பித்த மம்முட்டி, அவரது திரை உலகு தொட்டு தன் வாழ்வியலின் பல பக்கங்களை இங்கு பதிவேற்றி இருக்கிறார். இது எல்லோருக்கும் ஒரு வாழ்க்கைப் பாடமாக அமையும் என என் வாசிப்பு அனுபவம் சொல்கிறது.

இன்னும் மம்முட்டியவர்கள் தான் பார்த்த காட்சிகள் சந்தித்த மனிதர்கள் நடந்த நிகழ்வுகள் என எல்லாவற்றையும் காட்சியாக உருவாக்கி இந்த நூலைத் தருகிறார். இதை வரும் சம்பாஸ் என ஒதுக்கித் தள்ளி விடாமல் ஒரு சமூகப் பார்வையாக ஒவ்வொருவரும் இதைப் பார்க்க வேண்டும் என்பது அவரது வேண்டுகோளாக இருக்கிறது.

மம்முட்டி ஓர் இஸ்லாமியர் என்ற வகையில் பல இஸ்லாமிய மதம் சார்ந்த கோட்பாடுகளையும் அல்லது அவர் அனுபவித்த அந்த நாட்களில் இஸ்லாமிய ஈடுபாடுகள் பற்றியும் இதில் பேசியிருக்கிறார். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் 23 தலைப்புகளும் வாசகர்களைக் கவரும் விதத்தில் அமைந்திருக்கிறது. அதுபோன்று ஆறாவது தலைப்பு 34 ஆவது பக்கத்தில் மூன்றாம் பிறையென இடம்பெற்று இருக்கிறது. நூலின் பெயரைக் கொண்டுள்ள இப்பக்கங்கள் மிக சுவாரசியமான சம்பாசனையோடு நகர்ந்து செல்வதை அவதானிக்கலாம்.

வாசகர்கள் கட்டாயம் இந்த நூலைப் படிக்க வேண்டும். ஒருவரது வாழ்க்கை அனுபவத்தை தன் வாழ்வின் படிக்கல்லாக எடுத்துக் கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறேன்.




04

நூல் :-காலம் ஒரு வேட்டை விலங்கு
ஆசிரியர் :- ஜமீல்
வகை :- கவிதை
பக்கங்கள்:- 81
வெளியீட்டகம் :- புதுப் புனைவு
விலை :- 600
பதிப்பு :- 2024 ஆகஸ்ட்
தொட.இலக்கம்:- 0779689392

இதுவரை 10 பிரதிகளை வெளியீடு செய்த நூலாசிரியர் பதினோராவது பிரதியாக காலம் ஒரு வேட்டை விளங்கும் இத்தொகுதியைத் தருகிறார்.

நவீனம் பின் நவீனத்துவம் போன்ற போக்குகளில் கவிதைகளைத் தரக்கூடிய இவருடைய இத்தொகுதி பல்வேறுபட்ட உணர்வுகளை உள்ளடக்கியதாகவும் விழுமிய கருத்துக்களைப் பொதிந்ததாகவும் காணப்படுவதை அவதானிக்கலாம்.

இப்பிரதி அன்பு, அரவணைப்பு, சமூகப் பிரச்சினை, சிறுவர் பாடல் அமைப்பு என பல்வேறு கருத்தியல் சார்ந்த நுணுக்கங்களைக் கொண்டு எழுதப்பட்டிருப்பதை வாசிக்கின்ற போது காண முடிகிறது. அது மட்டுமல்லது, ஓசை நயங்களிலும் இங்கு குறைவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஜமீல் உடைய முன்னைய பிரதிகளை நோக்குகின்ற போது, அவர் கவிதைகளுக்கு நன்கு பரிச்சயமானவர் என்பது வாசகர்களுக்கு புலப்படும். ஆயினும், இப் பிரதியில் இன்னும் அவரது கவிதைகளில் உள்ள மேன்மைகளையும் தனித்துவமும் வெளிப்படுகிறது.

நூலாசிரியரிடம் இருந்து நூலை தபாலில் பெற்று வாசிக்க முடியும். வாசித்து அனுபவங்களை எமது விமர்சனப் பார்வைக்கு அனுப்பி வைக்கலாம்.

தொகுப்பு :
ஜவ்ஸன் அஹமட்
மருதமுனை
துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு



# பொலன்னறுவை மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் ‘பிம்புரத்தேவ குளம்’

வட மத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில் அரலகங்விலவில் பகுதியில் அமைந்துள்ள ஓர் அழகிய நீர்த்தேக்கமாக “பிம்புரத்தேவ குளம்” காணப்படுகின்றது.

இது பொலன்னறுவை மாவட்டத்தில் காணப்படும் பசுமையானதும் பசுமையின் அற்புதமான காட்சிகளால் சூழப்பட்ட ஓர் அழகான ஏரியாகும். இது “மதுரு ஓயா” அணையிலிருந்து சுமார் 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இப்பகுதி பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து சுமார் 43 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து பிம்புரத்தேவ குளம் சுமார் 260 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

இப்பகுதியை அண்மித்ததாக பல்வேறு சுற்றுலாத் தளங்கள் காணப்படுகின்றது. இங்கிருந்து 35 கிலோமீட்டர் தூரத்தில் “மகா ஓயா சுடுநீர்க் கிணறும்” அதேபோன்று மிக அண்மையில் “மாதுரு ஓயா தேசிய பூங்காவும்” 8.5 கிலோமீட்டர் தூரத்தில் காணப்படுகின்றது.



நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளில் இருந்து வருபவர்களுக்கு ஒரு மையப் பகுதியாக இப்பிரதேசம் காணப்படுகிறது.

இந்த ஏரியின் கட்டுமானப் பணிகள் 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வெறும் 03 மாதங்கள் என்ற மிகக் குறுகிய காலத்தில் 40,000 சதுர அடிக்கும் அதிகமான பரப்பளவை ஏரியாகக் கட்டினார்கள். கட்டுமானப் பணியின் போது 70க்கும் மேற்பட்ட மலைப்பாம்புகள் இங்கு பிடிபட்டதால் “பிம்புரத்தேவா” என்ற பெயர் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. குறிப்பாக இவ் ஏரி மூலமாக சோரா ஏரி, அரலகங்வில ஏரி, நெலும் ஏரி, இப்பன் ஏரி, மணமலா ஏரி, பாசி ஏரி, இகுரு ஏரி, வெள்ளிக் குளம் போன்ற பல ஏரிகள் இந்த ஓடையின் மூலம் 4,000 ஏக்கர் நெற்பயிர்களுக்கு நீர் வழங்குகின்றன.

2018 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட “மதகுகள்” இந்த ஏரிக்கு ஒரு வித்தியாசமான அழகையும் ஒட்டுமொத்த சுற்றுலாப் பயணிகளின் கவனத்தையும் மேலும் ஈர்க்கச் செய்கின்றன. இங்குள்ள அழகு எவ்வளவோ இருந்தாலும், ஒருவர் வேறு நாட்டிற்குச் சென்றதைப் போல உணரத் தொடங்குகின்றார்கள். பல சுற்றுலாப் பயணிகள் இந்த இடத்தை தங்கள் உல்லாசப் பயணத்தின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளனர்.

எனவே, நீங்கள் இந்த இடத்திற்குச் செல்லவில்லை என்றால் தாமதிக்க வேண்டாம். ஆனால், அதன் அழகைக் கெடுக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டாம் என்பதை நினைவூட்டுகிறேன். குறிப்பாக, நீர்நிலைகள் காணப்படும் பகுதியில் பொலித்தீன் பொருட்களையோ அல்லது கழிவுகளையும் நீர்நிலைகளில் வீசும் போது அது மாசுபடுகின்றது.



காட்டு விலங்குகளும் நீர்வாழ் உயிரினங்களும் மிகப்பெரும் ஆபத்தை உண்டாக்க நாம் செய்யும் சிறு தவறு காரணமாக அமைகின்றது. ஆகவே, இப்பகுதிகளில் சுற்றுலாக்காகச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் இங்குள்ள விதிமுறைகளையும் கவனத்திற் கொண்டு செயற்படுவது காலத்தின் மிகப்பெரும் தேவையாகக் காணப்படுகின்றது.

மாலை நேரங்களில் யானைகள் தோன்றுவது மிகவும் பொதுவானது. அதனையும் கவனத்திற் கொண்டு பயணிக்க வேண்டும். மேலும், இந்த ஏரியில் குளிக்கும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மதகுகளின் முன்பக்க பகுதிகள் நீர் வடிந்த நிலையில் காணப்படுவதால் அப்பகுதியில் குளிப்பது மிகவும் பாதுகாப்பானது. அதையும் தாண்டி மதகுகளுக்கு பின்பகுதியில் பரந்த பரப்பளவைக் கொண்ட பகுதியில் நீராடுவதும், குளிப்பதும் மிகவும் ஆபத்தானதாகக் காணப்படுகின்றது. அப்பகுதியில் முழுமையான முறையில் நீச்சல் தெரிந்தவர்கள் (10 அடிக்கு மேல் ஆழம் கொண்டது) குளிப்பது சாலச் சிறந்தது.

குறிப்பாக, மழைக்காலங்களில் இப்பகுதியில் நீர் நிலை மிகவும் அதிகமாக காணப்படும் இப்பகுதியை தரிசிக்க வருபவர்கள் மழைக்காலங்களில் இதனை பார்வையிடுவதால் தான் இதன் அழகை முழுமையாக ரசிக்க முடியும். மழையற்ற காலப் பகுதிகளில் இங்கு நீர் வற்றிய நிலையில் காணப்படும். மதகுகளில் இருந்து நீர் வடிவதையும் அவதானிக்க முடியாத நிலை இங்கு தோன்றும். அதனுடன் இணைந்ததாக நீர் நிலைகள்



சேறு(அரன) படிந்ததாக காணப்படும்.
நீங்களும் பிம்புரத்தேவ ஏரியை பார்வையிடச் செல்வதாயின் உரிய காலப்பகுதியில் சென்று இதன் அழகை ரசிக்க முடியும். செல்லும் பாதைகள் சிறப்பாக அமையப் பெற்றிருந்த போதிலும் குறிப்பிட்ட ஐந்து கிலோமீட்டருக்கு உட்பட்ட பாதை கிரவல் வீதியாகக் காணப்படுகின்றது. ஆகவே, முறையான முறையில் திட்டமிட்டு உங்களுடைய விடுமுறையை சிறப்பாக திட்டமிடுவீர்கள் என்று நம்புகின்றேன்.

**தொகுப்பு:**
**எஸ்.ஐ.எம்.நிப்ராஸ் (JP)**
**ஊடகவியலாளர்**

சிறுகதை

# வாடகை




“இந்த வருசமும் வாடகையை ஏத்தி இருக்கிறா வீட்டுக்காரம்மா” என்று அம்மா சொன்ன போது மிதிலாக்கு பதில் சொல்லத் தெரியாமல் பெருமூச்சே வந்தது. இருக்கிற விலை வாசியில் வீட்டு மளிகைச் செலவுக்கே மாதக்கடைசியில் “ததிங்கிணத்தோம்” போடும் போது, இதுவேற புதுத்தலை வேதனை என்றுதான் தோன்றியது. “சமாளிப்போம்” என்று புன்னகைத்தாள். “நேரமாகி விட்டது போய் வருகிறேன்” என்று கிளம்பிய போது அப்பா யாருடனோ போனில் தர்க்கிப்பது காதில் விழுந்தது. உரத்த குரலில் “வீட்டு வாடகையை மட்டும் ஏற்றினால் போதாது. மோட்டர் மாத்த வேணும் பெயின்ற் அடிக்க வேணும். என்று கதைத்துக் கொண்டிருந்தவரைக் கடந்து புன்னகையுடன் சைக்கிளில் ஏறினாள்.

“கடவுளே... எப்படியாவது ஒரு சொந்தவீடு கட்டி இந்தப் பிரச்சினையை நிப்பாட்ட வேணும்” என்ற படி பல்கலைக் கழகத்தை நோக்கி சைக்கிளை மிதித்தாள்.

காலங்கள் நகர மிதிலாவின் தலை எழுத்தும் மாறியது. திருமணப்பேச்சு சரி வந்தது. “மாப்பிள்ளைக்கு கொழும்பில வீடிருக்காம், கட்டாரில உழைத்துக் கட்டினவராம்” என்று சொன்ன போது மனதில சட்டென்று ஒரு நிம்மதி பரவியது... “அப்பாடி! இனி இந்த வாடகைப் பிரச்சினை இல்லை” என்று குதூகலமாக திருமணத்திற்கு சம்மதித்தாள்.

அன்பான கணவன். குறை சொல்வதற்கு எதுவுமில்லைதான்... ஆனால், இவள் அந்த வீட்டை உரிமை கொண்டாடிவிடக் கூடாது என்று அவர் வீட்டினர் ஆணித்தரமாக இவளுக்கு புரியவைக்க முயல, மனம் மீண்டும் துவண்டு போனது.. “நான் ஓர் ஓரமாக இருந்து விட்டுப் போகிறேன். ஏன் என்னை துரத்துகிறீர்கள்?” என்று கத்தவே தோன்றியது. ஒரு தடவை கணவரிடம் சொல்ல முயன்ற போது, அவர் அதனை தவிர்ப்பதையும் புரிந்து கொண்டாள். தனது இயலாமை மீது கோபம் கோபமாக வந்தது. எல்லாவற்றிலும் உச்ச கட்டமாக இவள் நிறைமாத கர்ப்பிணியாக இருந்த போது சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த இவளது மாமனார் “இந்த வீட்டின் பாதி உரிமைக்காரன் அடுத்த கிழமை பிறக்கப் போகிறான்” என்று சொன்ன போது, ஆணாதிக்கம் எப்படி மறைமுகமாக தழைக்குது “சீ, என்ன ஜென்மங்கள்” என்று மனது வெறுப்பை உமிழ்ந்தது.

திருமணத்திற்குப் பிறகு வேலைக்குப் போக விரும்பாதவள் பால்குடி மாறாத பிள்ளையை விட்டு விட்டு வேலைக்குப் போனாள். வீடு கட்டுவமே என்று தம்பியிடம் உதவி கேட்ட போது, ஏளனச் சிரிப்புடன் “நான் இங்க செட்டில் ஆயிட்டேன் எனக்கெதுக்கு வீடு” அவனது உதாசீனம் திகைக்க வைத்தது. சிறிய முதலீட்டில் சொந்த ஊரில் ஒரு சிறு வீடு கட்டி அப்பா அம்மாவைக் குடி அமர்த்தி அழகு பார்த்தாள்..

“அப்பாடா! இனி வாடகைப் பிரச்சினை இல்லை” என்று நிமிர்ந்தாள். “அடுத்த விடுமுறைக்கு தம்பியும் உன்னோட வாறானாம்” என்று அம்மா சொன்ன போது மனம் சந்தோஷப்பட்டது. தம்பியின் பிள்ளைகள் இவளின் பிள்ளைகள் எல்லாருமாக எங்கட சொந்த வீட்டில் என்ற நினைப்பே இனிக்க வைத்தது.

மாலை நேரம் வீடு திரும்பிக் கொண்டிருந்தவளின் போன் அழைத்தது. அப்பாதான் “ஹலோ அப்பா...” என்றாள் புன்னகையுடன்... “ஓம் பிள்ளை நான்தான்... எல்லோரும் லீவுக்கு வந்தா வீடு பத்தாது. பக்கத்தில ஒரு வீட்ட வாடகைக்கு எடுக்க வேணும். அதோட மோட்டர் மாத்த வேணும், பெயின்ட் அடிச்சாத்தான் வடிவா இருக்கும். பின்ன..” என்று அவர் தொடர்ந்து கொண்டிருந்தார். திகைத்துப் போயிருந்தவள் கண்களைச் சிமிட்டி தன்னை சமாதானப்படுத்தினாள். கண்களில் ஒரு குட்டி மழை உற்பத்தியாகி கண்ணங்களில் வழியத் தொடங்கியது. “சரியப்பா” என்று சொல்லியவளின் முன்பு விதி கைகொட்டிச் சிரிப்பதாகவே தோன்றியது.

**தொகுப்பு:**
**சவீதா சேந்தன் – அளவெட்டி**



# ஸ்கை தமிழ் கத்தார் உறுப்பினர்கள் ஒன்று கூடல்




கத்தாரில் ஸ்கை தமிழ் உறுப்பினர்களின் ஒன்றுகூடலானது பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெற்றது. இந்த ஒன்றுகூடலில் கத்தாரில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மேலும் இலங்கை, இந்தியா மற்றும் மலேசியாவிலிருந்து உறுப்பினர்கள் Zoom இணையவழி மூலமாக இணைந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஸ்கை தமிழின் வளர்ச்சிக்கான நடைமுறைகள், எதிர்காலத் திட்டங்கள், புதிய நிகழ்ச்சிகளை உருவாக்குவது தொடர்பான விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன. மேலும், ஒன்றுகூடலில் கலந்து சிறப்பித்த கத்தார் வாழ் ஸ்கை தமிழ் உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





# கத்தாரில் ஸ்கை தமிழ் நடாத்திய இப்தார் நிகழ்வு




கத்தாரில் முன்னணி தமிழ் ஊடகமாக செயற்பட்டுவரும் எமது ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு நடாத்திய இப்தார் நிகழ்வு ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஜே.எம்.பாஸித் அவர்களின் தலைமையில் மார்ச் 18 ஆம் திகதி அல் ஜசீரா அகடமியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வு கத்தாரில் வாழும் இலங்கை மற்றும் இந்திய சமூகத்தினரை ஒன்றிணைக்கும் விதமாக அமைந்தது.

நிகழ்வின் பிரதம அதிதியாக, கத்தார் நாட்டிற்கான இலங்கை தூதுவர் திருமதி ரோஷன் சித்தாரா கான் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் உரையாற்றிய தூதுவர், சமூகத்தினரின் ஒற்றுமை மற்றும் சமுதாயத்தின் நலன் குறித்தும் வலியுறுத்தினார். இப்தார் நிகழ்வில் இந்தியா லால்பேட்டையிலிருந்து வருகை தந்த மௌலானா, மௌலவி, ஹாபிழ் யு.முஹம்மது முஹசின் ஹசனி ஹஜ்ரத் அவர்கள் ரமழானைப் பற்றி சிறப்பு பயான் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களிலிருந்து குலுக்கல் முறையில் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டு Taste of Traditions உணவகத்தின் மூலம் வவுச்சர் வழங்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் கத்தாரில் வாழும் இலங்கை இந்திய சமூக தலைவர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், தொழிலதிபர்கள் மற்றும் கத்தார் வாழ் இலங்கை, இந்திய தமிழ் பேசும் சமூகத்தினரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.








2025

# இலங்கையில் சிறப்பாக இடம்பெற்ற ஸ்கை தமிழ் ஊடகத்தின் இப்தார் நிகழ்வு




ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பினால் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபக பணிப்பாளர் ஜே.எம். பாஸித்தின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபாஹ் பள்ளிவாசலில் மார்ச் (28) வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் எம்.எஸ்.எம். ஸாகிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை கௌரவ தலைவர் டாக்டர் அல்-ஹாஜ் எம்.எச்.கே.சனூஸ் காரியப்பர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை கௌரவ செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ் கௌரவ அதிதியாகவும், சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபாஹ் பள்ளிவாசல் கௌரவ தலைவர் ஓய்வுபெற்ற பொறியியிலாளர் யூ.எல்.எம். அஜிஸ் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டதுடன், ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் செய்தி முகாமையாளர் ஏ.எச்.எம்.ஹாரீஸ், பிராந்திய முகாமையாளர் எம்.ஏ.எச்.அஸ்ரி, உறுப்பினர் ஏ.கே. ஹஸான் அஹம்மட், பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள், ஊடக அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள், பிராந்திய செய்தியாளர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபாஹ் பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி எப்.எம். றஹ்மத்துல்லாஹ் விசேட துஆப்

பிரார்த்தனையை நிகழ்த்தினார். ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் உறுப்பினர் எம்.எச்.எம்.சிப்ஹான் இப்தார் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியதுடன், நன்றியுரையினை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் உதவி முகாமையாளர் மஹ்ரூப் எம்.ஜபீர் நிகழ்த்தினார்.

இதன் போது கலந்து கொண்ட பிரதம அதிதி, கௌரவ அதிதி மற்றும் விசேட அதிதி ஆகியோர்களுக்கு ஸ்கை தமிழ் குடும்பத்தினால் நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.















# ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் புதிய முயற்சி

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பானது இதன் ஒரு புதிய முயற்சியாக சமூகங்களை மேம்படுத்துவதற்கும், வறிய நபர்களை ஆதரிப்பதற்கும், சமூக நலனை ஊக்குவிக்கும் நோக்குடன் "இதயம்" புதிய நாமத்துடன் சமூக சேவை அமைப்பை ஆரம்பிக்கின்றது.

இதன் மூலம் ஒவ்வொரு நபருக்கும் கல்வி, சுகாதாரம் மற்றும் கண்ணியமான வாழ்க்கைக்கான அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட ஓர் அழகான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

எமது இந்த அமைப்பின் ஊடாக கல்வி மற்றும் திறன் மேம்பாடு மூலம் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களை ஆதரிக்கவும், தேவைப்படுபவர்களுக்கு சுகாதார உதவி மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கவும், இயற்கைப் பேரழிவுகள் மற்றும் நெருக்கடிகளின் போது நிவாரண முயற்சிகளை விரிவுபடுத்துவதற்கும், தமிழ் பேசும் சமூகங்களை மேம்படுத்தும் கலாசார மற்றும் சமூக முயற்சிகளை ஊக்குவிக்கவும் முடியும்.

இந்த அமைப்பின் ஊடாக நாம் முன்னெடுக்கும் திட்டங்களாக,

**1. கல்வி மற்றும் உதவித்தொகை**

தேவையுடைய மாணவர்களுக்கு நிதி உதவி, பாடசாலை உபகரணங்கள் வழங்குவதோடு, நிதி தடைகள் அவர்களின் கல்வியைத் தடுக்காது என்பதை உறுதி செய்வதாகும்.

**2. சுகாதார மற்றும் மருத்துவ ஆதரவு**

சுகாதார முகாம்கள், மருத்துவ உதவி மற்றும் சுகாதார வழங்குநர்களுடனான கூட்டாண்மை மூலம், தேவையான மருத்துவ சேவையை அணுகி, உரிய நபர்களுக்கு நாங்கள் கரம் கொடுக்கிறோம்.

**3. உணவு மற்றும் நலன்புரி உதவி**

தேவையுடையோருக்கு உணவு விநியோகத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு வழி வகுக்கவும், நிதி உதவிகளை வழங்கி, நிதி கஷ்டங்களை எதிர்கொள்ளும் குடும்பங்களை ஆதரிக்கிறோம்.

**4. பேரழிவு நிவாரணம் மற்றும் அவசர உதவி**

நெருக்கடி காலங்களில் அல்லது அனர்த்தங்களின் போது உணவு, மருத்துவ ஆதரவு மற்றும் புனர்வாழ்வு உதவி உள்ளிட்ட அவசர நிவாரணங்களை வழங்க தேவையான வளங்களை அணிதிரட்டுகிறோம்.

**5. கலாசார மற்றும் சமூக அதிகாரம்**

தமிழ் மரபுகளையும் கலாசாரத்தையும் பல்வேறு சமூகத்தால் இயக்கப்படும் முயற்சிகள் மூலம் ஊக்குவிக்கிறோம். தமிழ் மரபுகளைப் பாதுகாப்பதையும் கொண்டாட்டத்தையும் உறுதிசெய்கிறோம்.

இவ்வாறான பல திட்டங்களை சமூக நலனுக்காகவும் எமது நாட்டின் முன்னேற்றத்துக்காகவும் ஆரம்பித்துள்ளோம். இதில் நீங்கள் அனைவரும் பங்குதாரர்களாக முடியும். உங்களால் செய்ய முடியுமான விடயங்களாக,

**1. நன்கொடை**

உங்களால் வழங்கப்படும் ஒவ்வொரு பங்களிப்பும் ஒருவரின் வாழ்க்கையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

**2. தன்னார்வத் தொண்டு**

சமூக நல நோக்கத்துடன் நேர்மறையான தாக்கத்தை உருவாக்க எங்களுடன் கைக்கோர்த்துக் கொள்ள முடியும்.

**3. எங்களுடன் கூட்டாளர்**

பெரிய மற்றும் சமூக தாக்கத்திற்காக எங்களுடன் ஒத்துழைக்க முடியும். இதன் முதல் திட்டமாக "இதயம்" எனும் பெயருடன் ஏறாவூர் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்திற்கு விஜயம் செய்து, அங்குள்ள நோயாளர்களுக்கான உணவு மற்றும் அத்தியவசிய தேவைக்குரிய நன்கொடைகளை வழங்கியுள்ளோம்

## இளம் கலைஞர் அறிமுகம்

# சிறுவர் இலக்கிய படைப்பாளியாக வளரும் பிரிந்தா

கிழக்கு மாகாணத்தில் மட்டுமா நகரின் கல்லடியில் மேரிபெர்ணத் நேசராசா தம்பதிகளின் இரண்டாம் மகளாக பிரிந்தா பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியில் தொடங்கி, பின்னர் மட்டக்களப்பில் முதலில் இக்னேசியஸ் வித்தியாலயத்திலும் பின்னர் கல்லடி உப்போடை விவேகானந்தாக் கல்லூரியிலும் அதன் பின்னர் தன்னாமுனை வளனார் வித்தியாலயத்திலும் தொடர்ந்த போது பாடசாலைமட்ட செயற்றிட்டம் இவரது ஆக்கத்திற்கான நூலுருவைக் கொடுக்க வழிவகுத்தது. அதில் உதித்ததுவே “என் மன வானில்” 2006 இல் 19ஆவது வயதில் கன்னி வெளியீடு கைகூடியது.

தொடர் முயற்சியால் இரட்டை நோபல் உலகசாதனை புரியவும் மேலும் பல படைப்புக்களை உருவாக்கவும் கவிசார் நுட்பங்களை மேம்படுத்தவும் தன்னை வளர்த்துக் கொண்டவர் “மன ஆழியின் முத்துக்கள்” எனும் வலைத்தள E-book ஐயும் வெளியீடு செய்தமைக்காகவும் சாதனைப் பெண்களுக்கான “ WOMEN ICON. OUTSTANDING WRITER AWARD” 2024 எனும் விருதினை தன்வசமாக்கினார். “சிட்டுக்களின் மெட்டுக்கள்” எனும் படைப்பின் மூலம் “கவித்தேன் தூளி” எனும் கவிதைத் தொகுப்பு நூலில் இடம்பெற்று இடம்பிடித்தார். “மழலைச் சத்தம்” எனும் 133 பாடல்கள் அடங்கிய சிறுவர் பாடல் நூலையும் வெளியிட்டார்.

தான் எதைச் செய்கிற போதும் உன்னால் முடியும் எனத் தட்டிக்கொடுத்து தனக்கான நேரத்தினை ஒதுக்குவதற்காக ஊன்று கோலாக நிற்கும் இவருடைய கணவரையும், இறைபதமடைந்து ஆசி வழங்கும் தந்தை மற்றும் சிறிய தந்தையையும், முழு ஒத்துழைப்பைத் தந்து ஊக்குவிக்கும் புதல்வர்களான மகன் மகளிற்கும், முயற்சிக்கும் போதும் வெற்றி பெறும் போதும் துணை நிற்கும் மகிழ்வுறும் அம்மாவிற்கும், இரண்டாம் அன்னை மாமிக்கும், சகோதர சகோதரிகளுக்கும், தனக்கான பரிபூரண ஒத்துழைப்பை வழங்கும் என் பாடசாலை பழைய, புதிய அதிபர்களுக்கும், சக ஊழியர்களுக்கும், இந்த நூல் ஆக்கத்திற்கு நிதி கொடுத்துதவிய நட்பிற்கும், வடிவமைப்பு




பாராட்டு வாழ்த்துரைகளைத் தந்த ஊக்குவிப்பு செய்த உறவுகளுக்கும், எல்லா விதத்திலும் வழிப்படுத்தும் உறவுகளுக்கும் நன்றி கூறி மகிழும் இவரது படைப்புக்கள் ஒவ்வொன்றும் சிறுவர்களுக்கு மிகப் பிடித்து போகிறது. அவ்வளவு எளிய மொழி நடையும் கவரும் சொல்லாடலும் நிறைந்திருக்கிறது.

அதே போல சமூகம், காதல், பெண்ணியம் போன்ற கவிதைகளை எழுதும் போது இவரது எழுத்துப்பாணி முற்றிலும் மாறுபட்டதாக கவிநயம் கொண்டதாக






மாறிவிடுவது இவரது படைப்புக்கள் பலருக்கும் பிடித்துப் போவதற்கு காரணமாக அமைகிறது.

எழுத்துலகில் ஒரு சிறுவர் இலக்கிய படைப்பாளியாக நெடும் பயணமிட வேண்டும் என்ற ஆசையோடு அடுத்தடுத்த படைப்புக்களை தரும் திருமதி பிரிந்தா புஸ்பாகரன் அவர்களது எண்ணம் வண்ணமயமாகட்டும் என துணிந்தெழு சஞ்சிகை வாழ்த்தி மகிழ்கிறது .

தொகுப்பு:
**குலசிங்கம் கிலசன்**
துணிந்தெழு சஞ்சிகை

# கத்தாரில் பத்தாம் வகுப்பு தமிழ் பாடத்தில் முதல் முறையாக நூற்றுக்கு நூறு பெற்ற மாணவிகளுக்கு குவியும் பாராட்டுக்கள்

கத்தாரில் முதல் முறையாக பத்தாம் வகுப்பு தேர்வில் DPS பள்ளியை சேர்ந்த V.Ramyalakshmi மாணவியும் Ideal Indian பள்ளியை சேர்ந்த ராஜஸ்ரீ சிவதாசன் என்ற மாணவியும் தமிழ் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்று அசாதாரணமான சாதனையை புரிந்துள்ளனர்.



Ideal Indian பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்த மாணவி ராஜஸ்ரீ சிவதாசன் என்ற மாணவி 98.6% விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுள்ளதோடு பள்ளியளவில் 2ம் இடம் பிடித்துள்ளார். கத்தார் DPS பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்த ரம்யா லக்ஷ்மி என்ற மாணவி 98 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுள்ளதோடு பள்ளியளவில் 4ம் இடம் பிடித்துள்ளார். மாணவிகளின் கடின உழைப்பையும் திறமையையும் கத்தார் வாழ் தமிழர்கள் பெரிதும் பாராட்டி வருகின்றதோடு அவர்களின் தமிழ் ஆசிரியைகளான முனைவர் வாசுகி சத்தியபாபு மற்றும் திருமதி. அலர்மேல்செல்வி, வாணிஸ்வரி மோகன்குமார் ஆகியோருக்கு பாராட்டுக்கள் குவிகின்றன.

# சொகுசு விமானம் ட்ரம்ப்பிற்கான தனிப்பட்ட அன்பளிப்பு அல்ல - கத்தார் பிரதமர் அறிவிப்பு



அமெரிக்காவிற்கு வழங்கப்படும் சொகுசு விமானம் ட்ரம்ப்பிற்கான தனிப்பட்ட அன்பளிப்பு அல்ல என்று கத்தார் பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜசிம் அல்-தானி தெரிவித்துள்ளார்.

அது இரு நாட்டு அரசாங்கங்களுக்கு இடையிலான பரிமாற்றம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கத்தார் அன்பளிப்பு கொடுத்து ட்ரம்ப்பை தனது வசம் இழுக்கிறது என்ற குற்றச்சாட்டை அவர் நிராகரித்தார்.

அமெரிக்க நட்பு நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்க்க கத்தார் உதவுவதாக அவர் கூறியுள்ளார். கத்தார் என்றுமே அமெரிக்காவிற்கு ஆதரவு அளித்திருக்கிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சொகுசு விமான அன்பளிப்பு இன்னும் சட்டரீதியாக ஆராயப்படுகிறது என்று அவர் பகிர்ந்தார். இதுபோன்ற அன்பளிப்பை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அது முட்டாள்தனம் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனினும் வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து விலையுயர்ந்த பொருளை அன்பளிப்பாகப் பெறுவது குறித்துப் பாதுகாப்பு அக்கறைகள் எழுந்துள்ளன.

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் விளம்பரங்களையும்
## குறைந்த கட்டணத்தில்
## இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249




#Thuninthelu www.skytamilnews.com